www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை - 20 கார்த்திகை - 1993


## "இனப்பிரச்சனை" இல்லை என்பது பௌத்த-சிங்களப் பேரினவாதிகளின்

# அபாய அறிவிப்பு!!

### ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எச்சரிக்கை.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.பின் அரசியல் உயர்பீட உறுப்பினரும் பேச்சாளருமான தோழர். எல்.கேதீஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் வெளியிட்டிருப்பதாவது:-

இலங்கையில் இனப்பிரச்சனையே கிடையாது. ஆனால் பயங்கரவாதப் பிரச்சனை ஒன்றே இருந்து வருகின்றது என்று ஜனாதிபதி விஜயதுங்க பகிரங்கமாக விடாப்பிடியாக கூறிவருகிறார்.

இதனைத் தொடர்ந்து சிங்கள பேரினவாத அரசியல் அமைப்புக்களிலும் வெறி, வீராப்பு, கிளறல் முனைப்பிலும் பகட்டு ஆரவார தேசியக் கொள்கை வீராப்பிலும் முனைப்பாக அதிகரிப்பு இருந்து வருகிறது.

இனப்பிரச்சனை இல்லை என்று மறுத்துரைப்பதில் ஜனாதிபதியின் துணிச்சலான நிலைப்பாட்டுக்காக அவரை வாயாரப்புகழும் பகிரங்க அறிக்கைகளை சிங்கள ஆரக்ஷக சங்விதானய (சிங்கள பாதுகாப்பு இயக்கம்) என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. அத்துடன் யுத்தமிகை உணர்ச்சிக் கோளாறை தூண்டிவிடுவதற்கான முயற்சிகளை ஏனைய சிங்கள பேரின்வாத அமைப்புக்கள் மேற்கொண்டிருக்கின்றன. பேரினவாத வெறி வீராப்பு, முனைப்பு, பகட்டு, ஆரவார, தேசியக்கொள்கை ஆகியவற்றின் அதிகரிப்பு இவற்றில் இருந்து கண்கூடாகத் தெரிகிறது.

வகை மாதிரிக்குப் பொருத்தமாக, அந்நியப்படுத்தப்பட்ட தமிழர்களின் உணர்ச்சிகளை சாந்தப்படுத்தும் ஒரு முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வின் ஊடாக அரசு அதன் நிலையை தெளிவுபடுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் வெறுமனே சிங்கள பேரினவாத அமைப்புக்களின் இராணுவத்தீர்வு ஒன்றுக்கான எக்காள அழைப்பை புதுப்பிக்கும் விளைவையே ஏற்படுத்தியிருக்கின்றன.

உதாரணத்துக்கு "யாழ்தேவி நடவடிக்கை"யைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் மீண்டும் தமது முகாம்களுக்கு திரும்புவது என எடுக்கப்பட்ட முடிவுக்கு எதிராக சிங்கள ஆரக்ஷக சங்விதானய இயக்கத்தின் தலைவர் காமினி ஜயசூரிய தனது அதிருப்தியையும் சினத்தையும் சமீபத்திய அறிக்கை ஒன்றில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதேமாதிரி தமிழ் அமைப்புக்கள் எல்லாம் சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்பேசும் மக்களுக்கு தனித்தாயகம் ஆகிய கொள்கை கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதால் எந்த ஒரு தமிழ்அமைப்புடனும் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடாது என்று றுஹுணுரட்ட பிக்கு பெரமுன கடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதியை வற்புறுத்தியிருக்கிறது.

தற்போது இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாகவே இணைத்திருக்க வேண்டும் என்ற தமிழ் அரசியல் அமைப்புக்களின் கோரிக்கை சிங்கள பேரினவாத அமைப்புக்களினால் மட்டுமன்றி சிங்கள அமைப்பொழுங்கு அரசியல் சமுதாய முழுமையாலுமே கூட்டுமொத்தமாக நிராகரிக்கப் பட்டிருப்பது இதனை அபரிமிதமாகவே வெளிவரக்காட்டுகிறது.

மேற்போன்ற நிலைமைகளின்பேரில், இனப்பிரச்சனை தொடர்பான எமது நிலைப்பாட்டை மீண்டும் வற்புறுத்தவேண்டிய சூழ்நிலையும் இந்த நாட்டை தற்போது துண்டுதுண்டாக கிழிக்கும் அபாயகரமானபோக்குக்கு பதில் அளிக்கவேண்டிய சூழ்நிலையும் தற்போது எழுந்திருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம்.

முதலாவதாக அரசாங்கம் உள்ளடங்கலாக சிங்கள அமைப்பொழுங்கு அரசியல் சமுதாயமானது சிங்கள பௌத்த விசேஷ உரிமைக்கொள்கை யின் தன் மேம்பாட்டினால் குணாதிசயப்படுத்தப்படும் வகையில் இலங்கையில் நாட்டைக் கட்டியெழுப்பும் செயல்முறையைத் தொடர்வதா அல்லது மதச்சார்பின்மையையும் பல்லின ஜனநாயகத்தையும் இந்தசெயல் முறைமையில் அறிமுகப்படுத்துவதற்கான அரசியல் சங்கற்பம் அதனிடம் உண்டா என்பது பற்றி தெளிவுபெற வேண்டும்.

இலங்கை நாட்டை கட்டி எழுப்பும் செயல்முறைமை பூரணமற்றதாக இருப்பது மட்டுமன்றி இது பின்பற்றப்பட்டு வரும் குறுகிய மற்றும் குழுநிலைவாத போக்கு இனப்பிரச்சனையைத் தீர்த்துவைப்பதற்குப் பதி லாக இனப்பிரச்சனையை உக்கிரமாக்கி விட்டிருப்பதையே இன்று நாம் காண்கிறோம்.

## இணைப்புக் கோரிக்கை என்பது நியாயபூர்வ அபிலாஷையே

வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை யானது கடந்தகாலப் பெருமை அல்லது எல்லைகள் ஆகியவற்றுடனான புலனாகாத ஊன்றிய கருத்து ஒன்றிலிருந்து கிளம்பியதல்ல. மாறாக, இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான ஒருமுகப்படுத்தப் பட்ட அரசியல், நிர்வாகம் மற்றும் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியம் வாழ்விடம் ஆகியவற்றுக்கான கோரிக்கை காத்திரமான தற்கால யதார்த்தங்களினால் ஏற்பட்ட தமிழர்களின் நியாயபூர்வ அபிலாஷைகளில் இருந்தும் கிளம்புகிறது.

தமிழர் எதிர்ப்பு, படுகொலைகள், தண்டிக்கும், பழிவாங்கும் நடவடிக்கை கள், தமிழ்பேசும் மக்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கை வழிகள் அநேகமாக ஒவ்வொரு துறையிலும் நிலவும் இனப்பாராபட்சம் ஆகியனவே யதார்த்தமான பிரச்சனைகள். இவையே தமிழர்களின் தனித்துவம். பாதுகாப்பு நலன்கள் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பிரச்சினைகள்.

தமிழர்களின் நலன்களை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமப் படுத்திப் பார்க்கும்போக்கு பிழையானது மட்டுமானதல்ல. இனப்பிரச் சனைக்கு இராணுவத்தீர்வொன்றை நியாயப்படுத்த சிங்கள பேரினவாத அரசியல் அமைப்புகளும் அரசாங்கமும் வசதியாக கையாளும் ஒரு தர்க்கவாதமுமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தால் தமிழ் அமைப்பொழுங்கு அரசி யல் சமுதாயத்திற்குள் மேற்கொள்ளப்படும் மேலாதிக்கத்துக்கான தற் பெருமைக் கொள்கை நாட்டமும் அதனால் கையாளப்படும் பாசிச செயல்முறைகளும் நாட்டுக்கு அல்லது சிங்கள மக்களுக்கு தனித்துக் கவலைதரும் விடயமாகாது. மாறாக இது தமிழ்மக்களுக்கு கவலையையும் துன்பத்தையும் தரும் பிரமாண்டமான ஊற்று மூலமாகவும் கூட இருந்து வருகிறது.

ஆகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நடத்தையை சாட்டாகக் காட்டி தமிழ்பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளை மறுப்பதானது, உணர்ச்சியைக் கிளறிப் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதத்திற் கும், "இறுதி" இராணுவதீர்வை திணிப்பதை நோக்கமாகக்கொண்ட காலங்கடத்தும் தந்திரோபாயத்திற்கும் எவ்விதத்திலும் குறைந்ததாகாது.

இனப்பிரச்சனைக்கு ஒரு நியாயமான, பகுத்தறிவுபூர்வமான, சமத்துவ மான தீர்வு இல்லாத நிலையில், இராணுவ விருப்புத்தேர்வு நழுவித் தப்பித்துக்கொள்ளும் ஒரு மருட்சித் தோற்றமாகவே தொடர்ந்திருக்கும் என்பதை சிங்கள பேரினவாத அரசியல் அமைப்புகளின் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சிங்கள அரசியல் சமுதாயமும் அரசும் புரிந்து கொள்ள வேண்டும்.

**'நாம் மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை' தோழர்.க.பத்மநாபா.**

படிப்பகம்

www.padippakam.com



## எமது பார்வையில்

அகில உலகமும் கம்யூனிசம் அழிந்ததாகவே எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில் போலந்தில் மீண்டும் ஒரு அதிசயம் நிகழ்திருக்கிறது. ஆம் போலந்து கம்யூனிஸ்ட் கட்சியை மீண்டும் தேர்தலில் மக்கள் வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள்.

கம்யூனிசம் அழிக்கப்பட வேண்டும் என்பதில் முதலாளித்துவ, ஏகாதிபத்தியங்களின் ஏவலாளர்களும், எடுபிடிகளும் எப்போதுமே ஓய்வொழிச்சலின்றிச் செயல்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

ஆரம்பத்தில் போலந்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை வைத்தே முதலாளித்துவ ஊதுகுழல்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் என்ற அனைத்துமே கம்யூனிசம் அழிந்ததாக பறைசாற்றின.

போலந்தைத் தொடர்ந்தே கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சோவியத் யூனியன், கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் மாற்றங்கள் நடந்தன. இவை மறைப்பதற்கோ, மறுப்பதற்கோ இடமற்ற உண்மை. அதேபோல் இப்பொழுதும் போலந்தில் நடைபெற்ற தேர்தலில் மக்களின் தீர்ப்பும் அப்பட்டமான உண்மை.

ஆம் 52%மான மக்கள் மீண்டும் கம்யூனிசக் கொள்கைக்கே தங்கள் வாக்குகளை அளித்து கம்யூனிசம் சாகாது எனக் கட்டியம் கூறி நிற்கிறார்கள்.

உண்மையிலேயே போலந்திலும், கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனிலும் நிகழ்ந்தவை என்ன? மக்களுக்கு இந்த முதலாளித்துவ ஏவலாளர்களும், ஊதுகுழல்களும் போதித்தது என்ன? என்ற உண்மைகள் வெளிவரத் தொடங்குகின்றன.

கம்யூனிச முறையில் மக்கள் மாற்றத்தை விரும்பியதில் வியப்பொன்றும் இல்லை. அது உண்மையிலேயே கம்யூனிச ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். அவை நிகழாத காரணத்தால் நில அதிர்வு போல இந்த நாடுகளின் மக்களெல்லாம் தங்கள் அரசுகளுக்கு எதிராகக் கிளர்ந்தார்கள் என்று சொல்வதிலும் பார்க்க முதலாளித்துவ ஏகாதிபத்தியம் இந்த மக்களை எதிர்ப் புரட்சிகர சக்திகளுக்கு இரையாக வைத்து விட்டது என்பதே உண்மை.

உண்மையிலேயே மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் இப்பொழுது இருப்பதைவிட முன்னர் பூர்த்தியாக்கப் பட்டதாக மக்கள் நம்புகிறார்கள். தங்களை இந்த முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் ஏமாற்றி நடுக்கடலில் விட்டு விட்டதாகவே எண்ணுகிறார்கள்.

உண்மையிலேயே மேற்கு நாட்டு மக்கள் எல்லா வசதிகளையும், நுகர்ச்சியின் எல்லா அலகுகளையும் தாம் விரும்பும் விதத்தில் பெறுவதாகவும் தாமும் அதனைப் பெற இந்த மாற்றம் இடம்தரும் என்று எண்ணினார்கள்.

அன்று தாங்கள் அனுபவித்த வசதிகளைக் காட்டிலும் கூடிய வசதிகள் கிடைக்கும் என்ற ஆவலில் எல்லாவற்றையும் உடைத்து ஒரு புதிய வடிவுக்குள் தன்னிறைவு, சுயதேவைப் பூர்த்தி, கட்டுப்பாடுகள் நீங்கப் பெற்ற சமூக, அரசியல், பொருளியல் சுதந்திரம் கிடைக்கும் என்றே நம்பினார்கள். அவைகளின் ஏமாற்றமே இன்றைய தேர்தலின் பிரதிபலிப்பாகத் திகழ்கிறது.

அவர்களின் இம்முடிவு, "முன்பின் தெரியாத பேயைக் காட்டிலும் தெரிந்த பேயே போதும்" என்ற உண்மைக்கு வந்து விட்டார்களோ அல்லது கையில் கிடைத்த ஒரு பறவை, மரத்தில் இருக்கும் இரு பறவைகளைக் காட்டிலும் மேலானது என்ற முடிவுக்கு வந்துள்ளார்களோ என்று எண்ண வைத்துள்ளது.

மக்களால் உடைத்தெறியப்பட்ட கம்யூனிசத்தில் ஏன் மக்களுக்கு நாட்டம் ஏற்பட வேண்டும். எல்லோராலும் கூடாது என்று ஒதுக்கப்பட்ட கொள்கையில் என்ன நன்மையைக் கண்டு அந்த மக்கள் அதை அடைய ஆசைப்படுகிறார்கள்.

இன்று ருஷ்யக் குடியரசில் நடப்பவை என்ன? ஸ்டாலின் காலத்தை விட கொடுமையானவைகள் எப்படி ஜனநாயகத்துக்குள் இடம் பெறும்? இதையிட்டு மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்.

ஜனநாயகவாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்ட, போலந்தில், கிழக்கு ஜேர்மனியில், சோவியத் யூனியனில் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களின் எதிராளிகள் செய்ததெல்லாம், அந்த மக்களுக்கு கிடைத்து வந்த வசதிகளையும், அடிப்படைத் தேவைகளையும் இல்லாமல் செய்தமையும், அவர்களின் அமைதியையும், சமாதானத்தையும், சகஜவாழ்வையும் நிலைகுலைத்தமையேயாகும்.

வெய்யிலில் வாடியவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். ஆகவே கம்யூனிசத்தின் நிழல் அவர்களுக்கு கைகொடுக்கும் என்பதை அனுபவித்த அவர்கள்தான் அறிவார்களேயன்றி, ஜனநாயகம் பேசும் கொலைகார முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் ஏவலாளர்களும் அல்ல.

இங்கே மலரப் போகும் மக்களின் உண்மையான உணர்வு ரீதியான தீர்ப்புகளே, உலகெங்கும் சுரண்டப்படும், ஒடுக்கப்படும், சுதந்திரத்துக்காகப் போராடும் உழைக்கும் மக்களுக்கு உத்வேகத்தை மீண்டும் அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மக்ளின் தீர்ப்பால் வெற்றி பெற்றுள்ள போலந்து கம்யூனிஸ்ட் கட்சியை ஆட்சிக்கு வரவிடாது தடுப்பதற்கு, அல்லது ஆடசியைக் கவிழ்ப்பதற்கு, அல்லது கட்சியையே அழிப்பதற்கு ஏகாதிபத்தியம் தனது முழுப் பலத்தையும் பிரயோகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதே வேளை கடந்தகால கசப்பான அனுபவங்களை கணக்கில் கொண்டு மக்களை கம்யூனிச திருப்தியாளர்களாக மாற்றி ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராட வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு போலந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு.

# தமிழ் மக்களை தலையற்றவர்களெனக் கருதும் புலிகளும், தொண்டமானும்

அமைச்சர் தொண்டமானுக்கு, இலண்டனில் நடந்த விருந்துபசாரம் ஒன்றைத் தொடர்ந்து, அவரைப் புலிகளின் பிரதிநிதிகள் அணுகி, தமது மத்தியகுழு உறுப்பினரான திலகரைச் சந்திக்கும்படி கோரியதாகவும், அதனைத் தொடர்ந்து தான் பாரிஸ் சென்றதும், அங்கு தான் தங்கி நின்ற ஹோட்டலுக்கு திலகர் வந்து தன்னைச் சந்தித்துப் பேசியதாகவும், தொண்டமான் கொழும்பிலிருந்து வெளிவரும் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். மேலும் அவர், புலிகள் தமிழ்ஈழத்துக்கு மாற்றாக, சமஷ்டி அமைப்பொன்றை ஏற்றுக் கொள்ளத் தயாரக இருப்பதாகவும், அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யும்படி கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.

இன்று மலையகத்தில் வளர்ந்து வரும் அரசியல் விழிப்புணர்ச்சி ஒரு புறமும், காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருங்கி வருகின்றமை மறுபுறமும், இவரது தனிக்காட்டு ராஜாப் போக்கை ஆட்டம் காண வைத்திருக்கிறது. இதற்கு மாறாக, அல்லது இந்தப் பலவீனங்களை ஈடுசெய்வதற்காகவே இன்று இவர் புலிக் கொடியைத் தூக்கியுள்ளார் என்பதை அறிந்து கொள்ளப் பெரிய அரசியல் ஆய்வுகள் தேவையில்லை.

இதேவேளை தான்தோன்றித் தனமான போக்கினாலும், பயங்கரவாத நடவடிக்கைகளாலும், மனிதஉரிமை மீறல் சம்பவங்களாலும், அரசியல் அரங்கில் அந்நியப்பட்டுள்ள புலிகள், தாம் சமாதானப் பிரியர்கள் என்ற மாயையை ஏற்படுத்த வேண்டும் என்பதைக் குறிக் கோளாகக் கொண்டு, லண்டனிலும், பாரிஸிலும் விழுந்தடித்துக் கொண்டு, தொண்டமானை எப்படியும் சமாதானப் பிரியராக்கி விடவேண்டும் என்று ஓடித்திரிந்தமை, தொண்டமானின் சந்தர்ப்பவாதத்திற்கு, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.

இலங்கையின் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளில் மிகவும் சமயோசிதமானவர் என அனைவராலும் கணிக்கப்படும் தொண்டமானுக்கு, புலிகளின் ஆதங்கத்தையும், தடுமாற்றத்தையும் புரிந்து கொள்ள வெகுநேரம் எடுக்கவில்லை.

மேற்கூறிய பின்னணியிலேயே புலி ஆதரவாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலும், மாலையில் இடம்பெற்ற விருந்துபசாரத்திலும் தொண்டமான் தமிழ்பேசும் மக்கள் தலையற்றவர்கள் என நினைத்துக் கொண்டு அவர்களுக்கு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் அள்ளித் தெளித்தார். அவர் கூறிச் சென்ற கருத்துக்களில் குறிப்பிடத் தக்கவை:

அரசின் மனிதஉரிமை மீறல்கள் பற்றி கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, போர்என்று ஒன்று நடக்கும் போது மனிதஉரிமை மீறல்பற்றிக் கண்டும் காணாததுமாக இருப்பதுதான் ஒரேவழி என்றும், தமிழனுக்கு மனிதஉரிமை, அமைதி இவற்றிலும் பார்க்க கௌரவம்தான் முக்கியம் என்றும், ஆனபடியால் இதைப்பற்றி பேசி நேரத்தை வீணடிக்காமல் கௌரவத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும், கௌரவம் வேண்டுமெனில் தியாகங்கள் தொடர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தியாகம் எவ்வளவுக்குத் தொடரவேண்டும் என்று பார்வையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, அதற்கான பதிலைப் புலிகளிடமே கேட்கவேண்டும் என்று சொல்லி நழுவிக் கொண்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே

**அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே!**
தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம் என்பதிலும் பார்க்க எமது தமிழ் கட்சிகளினால், இயக்கங்களினால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம் என்பது தான் வேதனையானதும், கொடுமையானதுமாகும்.

காலத்துக்கு காலம் நடக்க முடியாத விடயங்களைக் கூறி மக்களை நம்பவைத்து நமது தலையில் மிளகாய் அரைப்பது எமது அரசியல் தலைமைகளுக்கு வழக்கமாகிப் போய்விட்டது. தமிழ்பேசும் மக்களும் தலைவர்கள் பால் கொண்டுள்ள அதீத நம்பிக்கையால் எது சொன்னாலும் தலையாட்டிவிட்டு ஏமாந்துபோவது வழக்கமாகி விட்டது.

தொண்டைக் குழாய்களால் கத்திய காலத்திலும் மக்கள் ஏமாற்றப் பட்டார்கள். இன்று துப்பாக்கிக் குழாய்களால் செத்துக்கொண்டிருக்கும் போதும் மக்கள் ஏமாற்றப் படுகிறார்கள். இதிலிருந்து விடுபடுவதிலிருந்து தான் விடுதலையின் வித்தே ஆரம்பமாகிறது.

எமது மண்ணையும் மக்களையும் அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் புலிகள் தாமும் அரசியல் பேசுகிறோம் என்று தமது பள்ளி செல்லா பாலகர்களுக்கு காட்டிக்கொள்ள, வெளி உலகுக்கு நாடகமாட அவ்வப்போது போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்ற வார்த்தைகளை உதிர்த்துள்ளார்கள்.

அந்த வரிசையில் அண்மையில் உதிர்த்த பொன்மொழி. சமஷ்டி மூலம் தீர்வுக்கான பேச்சு வார்த்தைக்கு நாம் தயார் என்று பாலசிங்கம் அறிவித்துள்ளது தான். இவர்களது வரலாற்றில் அமைதி, ஜனநாயகம், அரசியல் தீர்வு என்பன அலர்ஜிக் என்பது ஒருபுறமிருக்க, தீர்வுகாண முடியாத தீர்வை சொல்லி தம்மையும் தீர்வு விரும்பிகள் என்று காட்டிக் கொள்வது என்பது தமிழ்பேசும் மக்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

அதேபோல் சமஷ்டி என்ற சொல் டாக்டர். பாலசிங்கம் சொல்வதால் இப்போதுள்ளவர்களுக்கு புதிதாக இருக்கலாம். ஆனால் தமிழ்பேசும் மக்களின்பால் கோலோச்சிய தமிழ் கட்சிகளின் வரலாறே சமஷ்டி என்ற சொல்லிலேதான் தங்கி இருந்தது என்பது யாரும் அறியாததல்ல.

அகில இலங்கை காங்கிரசிலிருந்து பிரிந்த தமிழரசுக் கட்சி சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக இந்தச் சமஷ்டியால் உயிர் வாழ்ந்திருக்கிறது.

இன்று மீண்டும் நாற்பது வருடங்களுக்கு பின்பு அதே சமஷ்டி என்ற சொல் ஆதிக்கம் பெற்று வருகிறது.

**சமஷ்டி அமைப்பு என்று சொல்கின்ற விடயம் இலங்கையில் இல்லை. இலங்கையில் ஒற்றையாட்சிதான் நிலவுகிறது. இலங்கையின் அரசியல் சாசனத்தை சமஷ்டி அரசியல் சாசனமாக மாற்றினால்தான் சமஷ்டி பற்றிப் பேசமுடியும். மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதனூடாகத்தான் இலங்கையின் அரசியல் சாசனத்தை மாற்ற முடியும். அதுவரையில் இலங்கையில் சமஷ்டி பற்றிப் பேசுவது அர்த்தமற்றதும் சுத்தப் பொய்யானதுமான விடயமாகும்.**

இந்த சமஷ்டி பற்றி அண்மையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) செயலாளர் நாயகம் தோழர். பிரேமச்சந்திரன் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் விரிவாக பின்வருமாறு கூறியுள்ளார்.

சமஷ்டி அமைப்பு என்று சொல்கின்ற விடயம் இலங்கையில் இல்லை. இலங்கையில் ஒற்றையாட்சி தான் நிலவுகிறது. இலங்கையின் அரசியல் சாசனத்தை சமஷ்டி அரசியல் சாசனமாக மாற்றினால் தான் இங்கு சமஷ்டி பற்றி நாம் பேச முடியும்.

மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதினூடாகத்தான் இலங்கையின் அரசியல் சாசனத்தை மாற்ற முடியும்.
அதுவரையில் இலங்கையில் சமஷ்டி பற்றி பேசுவது அர்த்தமற்றது. சுத்தப் பொய்யானது மான விடயமாகும்.

ஆக அர்த்தமற்றதும், நடைமுறைப் படுத்தப் படமுடியாததும், சுத்தப் பொய்யானதொரு விடயத்தைத் தான் பாலசிங்கம் அரசியல் தீர்வு என தெரிவித்துள்ளார்.

ஏன் அர்த்தமற்றது? ஏன் நடைமுறைப்படுத்த முடியாதது?

இன்றைய அரசியல் சாசனத்துடன் நாம் சமஷ்டி பற்றிப் பேசுவது அர்த்தமற்றது.

சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி சமஷ்டி அரசியல் சாசனமாக மாற்றுவது நடைமுறைப் படுத்த முடியாதது.

சமஷ்டியை விட குறைந்த அளவுள்ள மாகாணசபை முறையையே வடக்கு கிழக்கில் இயங்க விடாத அரசு, அந்த மாகாண சபைக்குரிய அதிகாரங்களைக் கொடுக்க மறுத்த அரசு, இருக்கும் அதிகாரங்களையே பறித்தெடுக்கும் அரசு, வடக்கு கிழக்கை பிரிக்க முயலும் அரசு, இனப்பிரச்சனையே இல்லையெனக் கூறும் அரசு, இராணுவத் தீர்வு மூலம் தமிழ்பேசும் மக்களையும், மண்ணையும் அழித்தொழிக்க நினைக்கும் அரசு.

அரசியல் சாசனத்தை மாற்ற முனையும் என, சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த முன்வரும் என, சமஷ்டிக்கு சம்மதிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

அப்படியொரு நெருக்கடி நிலை ஏற்பட்டாலும் சர்வஜன வாக்கெடுப்பில் பெளத்த சிங்கள பேரினவாதிகள், மக்களை எதிராக வாக்களிக்கவைக்கவே வழிபண்ணுவார்கள். இது இல்லாத பழத்துக்கு கொட்டாவிவிடும் நிலைதான்
**அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே!**
தமிழ்பேசும் மக்களுக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமான வடக்கு கிழக்கு மாகாண அரசினை நாம் சரியாக பயன் படுத்தியிருப்போமாயின் நம்மை நாமே வலுப்படுத்தி இருக்க முடியும்.

நமது பிரதேசங்களை காப்பாற்றி இருக்க முடியும். நமது மக்கள் அமைதியான சகஜ வாழ்க்கையை பெற்றிருக்க முடியும். மாகாண அரசு என்னும் இருப்பை பலப் படுத்திக் கொண்டு நமது விடுதலைப் பாதையை செப்பனிட்டிருக்க முடியும்.

ஆனால் அந்த அரிய சந்தர்ப்பத்தை இதே புலிகள் அரசுடன் கை கோர்த்துக்கொண்டு அழித்தவர்கள். மக்களின் அமைதியை குலைத்தவர்கள்.

கருவறையிலிருந்து வந்த பாலகர்களின் எதிர் காலத்தை கல்வி இல்லாது இருட்டறையாக்கியதோடு கல்லறைக்கு வழி காட்டுபவர்கள்.

இருந்த மாகாண அரசை அழித்து விட்டு இல்லாத சமஷ்டி பற்றி பேசி மக்களை முட்டாள்களாக்குகிறார்கள்.

சொந்த மக்களையே கொன்று குவித்தவர்கள், சொந்த மக்களையே சிறைவைத்து சித்திரவதை செய்பவர்கள், முஸ்லீம் மக்களை துரத்தி அடித்தவர்கள். மக்களின் கருத்து சுதந்திரத்தை, எழுத்து சுதந்திரத்தை பறித்து அடிமைகளாக வைத்திருப்பவர்கள், ஏனைய கட்சிகளை, இயக்கங்களை தடைசெய்து இயங்கவிடாது ஜனநாயகத்தையே சிறைவைத்துள்ளவர்கள் இந்தப்புலிகள். இவர்கள் அரசியல் தீர்வு பற்றி பேசுவது சாத்தான் வேத மோதுகிற கதை தான்.

அரசியல் தீர்வின் மூலம்தான் எமது பிரச்சனை தீர்க்கப்பட முடியும் என்பதனை அண்மைய உலக வரலாறுகள் எமக்கு காட்டி நிற்கின்றன. அதேவேளை அரசியல் தீர்வென்று சொல்லி மக்களை ஏமாற்றுபவர்களை நாம் அடையாளம் கண்டு நிராகரிப்பது தான் அரசியல் தீர்வு வழிக்கு நாம்செல்லும் முதல் கட்டமாகும்.



## நாபா

சின்னக் கண்கள்
இரண்டும்
சிந்தனைப் பொறி
அந்தப் பார்வை
வருடிச் செல்லும் போது
மனக்காட்டில்
புரட்சித் தீ
பரப்பும்

புன்னகை
இதயத்தை நெருடும்
மானுட நேயத்தை
ஊற்றெடுக்க வைக்கும்
இந்தப் போராளியின்
முகத்தில் அன்பு
பூவாக மலரும்

அந்தக் கண்களும்
அந்தப் புன்னகையும்
அந்த முகமலரும்
இன்றும் எங்கள்
நினைவுப் பதிவுகளில்
நீங்காது நின்று
புரட்சியாய்
நேயமாய்
அன்பாய்
எங்களை
பிரகாசமாக்குகின்றது.

தோழர். துரைமுகிலன்.

எமது பாசமிகு தோழர், உழைக்கும் மக்களின் உன்னத தலைவன் தோழர். பத்மநாபாவின் நாற்பத்தி இரண்டாவது பிறந்ததின (கார்திகை 19) நினைவாக.....

படிப்பகம்

www.padippakam.com



# நிச்சயமில்லாத எதிர்காலத்தை நோக்கித் தமிழர்கள்.....

ஒரு சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி எனும் போது பொருளாதார வாழ்விலும், கலாச்சாரத்திலும் பிரதானமாக அவை தெரிந்தாக வேண்டும். உலகின் இது வரைகால வரலாற்றில் நிகழ்ந்த ஒடுக்கு முறைகள், சுரண்டல்கள், ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களில் எல்லாம் முன்னேற்றகரமான மனித வாழ்வு பற்றிய குறிக்கோள் இருந்தது.

நிலப் பிரபுத்துவ சமூக அமைப்புக்கு எதிரான பிரான்சுப் புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயரிய நோக்கங்களை கொண்டிருந்தது.

ரஷ்யப் புரட்சி ஏற்றத் தாழ்வற்ற சோசலிச அமைப்பை கோரி நின்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது காலனி நாடுகள் சுதந்திரத்தை கோரி நின்றன. ஏகாதிபத்தியத்தினதும், பாசிசத்தினதும் வீழ்ச்சியை அவாவி நின்றன.

கியூபா, வியட்நாம் வரை சுதந்திரமும், சுரண்டலற்ற நாகரீகமான அமைப்பும் எதிர்பார்க்கப் பட்டது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு தீர்வுக்கு வருகிறதென்றால் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக அகதிகளாக அலைந்து கொண்டிருக்கும் தங்கள் தேசத்து மக்கள் தொடர்பான பொறுப்புணர்ச்சியிலிருந்துதான்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நிறவெறி பாரபட்சமற்ற ஒரு சமூக அமைப்பை கோரிநிற்கிறது.

**ஆனால் ஈழத் தமிழர்களின் விடுதலை என்ற பெயரால் புலிகள் நடாத்திக் கொண்டிருப்பதென்ன??**

இங்கு மேலே கூறப்பட்ட போராட்டங்களின் போது சுதந்திரமான, நாகரீகமான, சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார வாழ்வில் ஒரு மேம்பட்ட நிலை எதிர்பார்க்கப்பட்டது. விடுதலை அல்லது புரட்சிகர மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

ஆனால் எமது தேசத்தின் நிலையே வேறு. சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கு முன்பே எமது தேசத்தின் புதிய எஜமானர்களால் மக்கள் அடிமைப்படுத்தப் பட்டார்கள். மக்கள் தமக்கு அடிமைமைகள் என்பதே இவர்களுக்கு பெருமித உணர்வை ஏற்படுத்துகின்றது.

இங்கு விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொண்டு அழிவை நோக்கி அழைத்துச் செல்லும் வேலை நடைபெறுகிறது.

அழிவு......... அழிவு....... அதுதான் இங்கு இலட்சியம். விஸ்தாரமான மயானங்களைப் பார்த்து இந்த ஆதிக்க சக்திகள் பேருவகை கொள்கின்றன. சமூகத்தின் முன்னேற்றம், வளர்ச்சி, மகிழ்ச்சியான வாழ்வு இவற்றுக்கு முற்று முழுதான எதிர்நிலைப்பட்ட எண்ணங்களே இங்கு ஆதிக்கம் பெறுகின்றன.

ஆயுதம், பணம், அதிகாரம் இவையே இச் சக்திகளின் குறிக்கோள். மனிதாபிமானம், ஜனங்களின் நிம்மதி, பாவம் புண்ணியம் இவை பற்றி இவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. இவை பற்றிய உணர்ச்சிகளும் இல்லை. தங்களைத் தவிர வேறு மனிதர்கள் எவரையும் கொல்வதையோ, சித்திரவதை செய்வதையோ, ஈவிரக்கமின்றிச் சுரண்டுவதையோ பற்றி இவர்களின் மனச்சாட்சி எவ்விடத்திலும் உறுத்துவதில்லை.
ஆனால் இவர்களைத் தேச பக்த சக்திகளாக, விடுதலை வீரர்களாகச் சித்தரிக்கும் சிலர் எமது சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் தம்மை முற்போக்கு சக்திகளாகவும் கருதுகிறார்கள்.

ஒரு தேசம் சுதந்திரத்திற்காகப் போராடுகிறதென்றால் அப் போராட்டத்தில் பெரும்பான்மை மக்களின் பங்கு இருந்தாக வேண்டும். சமூகத்தின் அவலத்தையும், துயரத்தையும், ஒடுக்கு முறைக்கெதிரான ஆவேசத்தையும் பிரதிபலிப்பதாக இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். மக்கள் போராடும் இயக்கங்களின் சரி பிழைகளை சுட்டிக் காட்டும் உரிமை வேண்டும். மாறுபட்ட அபிப்பிராயங்களுக்கு இடமிருக்க வேண்டும்.

சாத்தியமான அளவில் பொது எதிரியைத் தனிமைப் படுத்தும் வகையில் பரந்து பட்ட ஐக்கியத்தை கட்டியமைக்கும் நோக்குடனான விசாலமான எண்ணம் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இரக்க உணர்வு, பரிவு, அன்பு போன்ற மானிட குணங்கள் வேண்டும்.

ஆனால் இங்கு மூளையில்லாத துப்பாக்கிகள் தமது மேலாண்மையைச் செலுத்துகின்றன. சமூகத்திலிருந்து ஆக்கபூர்வமான விடயங்கள் எதுவும் வெளிவருவதற்கு இடமேயில்லை. ஆகக் குறைந்த பட்ச தண்டனை மரணம்.

தவறினால் பாரச் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டு நிலக்கீழ் இருட்டறைகளில் வாழ வேண்டும். மேலிருந்து சிறுநீர் கழிப்பார்கள். வெங்கணாந்திப் பாம்பைப் பிடித்து உள்ளே விடுவார்கள். அரைகுறை உணவு. இடையிடையே ஆடு, மாடுகள் போல் வண்டிகளில் ஏற்றி இடமாற்றம் செய்வார்கள். அது இன்னொரு நிலக்கீழ் இருட்டறையாக இருக்கலாம். அல்லது சுடலையாக இருக்கலாம். பேரினவாத ஆட்சியாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட அற்ப சொற்ப உரிமைகளைக் கூட இவர்கள் பறித்து விட்டார்கள். சொந்த மக்களையே துரோகிகள் என்றும், தமக்கெதிரானவர்கள் என்றும் கொன்று தள்ளியவர்கள்.

ஆயிரமாண்டுகளாக தமிழர்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்த முஸ்லீம் மக்களை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றியவர்கள். மொத்தத்தில் எமது சமூகத்தின் சிறந்த அங்கங்களை சூறையாடியவர்கள்.

**கடந்த பதினைந்து வருடப் போராட்டத்தில் புலிகள் ஈழத்தில் ஆதிக்க சக்திகளாக இருந்திருக்கிறார்கள். சமூகத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா ?? வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதா ??????**
திறந்த மனதுடன் சிந்திக்க வேண்டிய விடயமிது.

புலிகளுக்கு எதிராக சிந்திப்பது கூட உயிராபத்தை விளைவிக்கும் என்றாகி விட்டது.

செக்கோசலவாக்கியப் புரட்சியாளன் யூலியஸ்பூசிக் பாசிஸ்டுகளின் சிறையில் சிறைக் குறிப்புக்களையேனும் எழுத முடிந்தது.

பல்கேரியப் புரட்சியாளன் ஜோர்ஜ் டிமிட்ரோவ் பெர்லின் பாராளுமன்றத்தை எரித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு நாசிகளின் நீதி மன்றத்தில் ஏற்றப் பட்டான். அங்கு நாசிகளை அம்பலப்படுத்தவும், தனக்காக வாதாடவும் முடிந்தது.

மன்காடா இராணுவ முகாமைத் தாக்கிய பிடல் கஸ்ரோ வரலாறு என்னை விடுதலை செய்யும் என்ற புகழ்பெற்ற உரையை எதிரிகளின் நீதிமன்றத்தில் நிகழ்த்த முடிந்தது.

**புலிகளுக்கு எதிராக ஈழத்து மனிதன் மூச்சுவிட முடியுமா??**

சுதந்திரத் தமிழீழம், சோசலிசமும் சேர்த்து. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு கோவணம் பறி போகாததுதான் பாக்கி. இதனை விலாவாரியாக இச்சிறு கட்டுரையில் விளக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

போதாக் குறைக்கு அருஞ் சொற்கள் பலவும் தமிழுக்கு கிடைத்துள்ளன. வெட்டு, கொத்து, போடு, சுடு, டம்பிங், பங்கர்.

**தேங்காய் எண்ணெய் விளக்கொளியில் ஈழத் தமிழர்கள் வாழ்வது நாளைய பொழுது நம்பிக்கையானதாக இருக்குமென்றால் அதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. இன்றும் இருட்டு நாளையும் இருட்டு என்றால் அதன் அர்த்தம் என்ன ?????**

நாளைய இருட்டுக்காக இன்றைய இருட்டில் சாவது அவன் விதி. அவன் வாழ்வோ சாவோ இருட்டில்தான் நிகழும். ஆனால் மாவீரர்கள் என்றழைக்கப் படுபவர்களின் சமாதிகள் குறிப்பிட்ட சிலரை விளம்பரம் செய்து கொண்டு ஜொலிக்கும். இன்றைய நிகழ்வுப் போக்கு எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கோடி காட்டுகின்றது.

புலிகளை தேசபக்த சக்திகளாக கருதுபவர்களுக்கு இவை எல்லாம் நீக்குப் போக்கான விடயங்களா? புலிகளின் வீரதீரச் செயல்களில் வியப்புற்று நிற்கிறார்கள் என்றால் இவர்களின் ரசனை, சாதாரண சராசரிக் கிறிக்கட் ரசிகனைவிட தரம் தாழ்ந்து போய்விட்டார்கள் என்று வேதனைப்பட வேண்டிய நிலவரம் இருக்கிறது.

இப்படியான ரசனை இவர்களிடம் இருக்குமானால் அது ஆபத்தானதும் கூட. ஏனெனில் எமது சமூகத்தில் பரவும் ஒருவித நச்சுக் கிருமியை தங்களை அறியாமலே ஊட்டுவிக்கிறார்கள் என்றாகிவிடும்.

**நாட்டு நிலவரங்களைத்தான் தங்களுக்குள் கதைக்க முடியுமா?**

வயிற்றுப் பிழைப்புக்காக புலிகளை வரிந்து கட்டும் புலி ஆதரவாளர்கள், பத்திரிகைகளைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லை.

முற்போக்காளர்களாக தங்களைக் கருதும் மக்கள்பால் ஈடுபாடு கொண்டவர்கள் ஏன் புலிகளைத் தேசபக்த சக்திகளாக கருதுகிறார்கள் என்பதுதான் புரியாத புதிர்.

இவர்கள் சொல்வார்கள். இவை எல்லாம் தவறுதான். ஆனால் புலிகள்தான் களத்தில் நின்று போராடுகிறார்கள் என்று. களத்தில் நின்று எதற்காகப் போராடுகிறார்கள் என்ற

(ஐந்தாம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# மக்களுக்காக வாழ்ந்த மாமனிதன்


மக்களுக்காகவே தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த மாமனிதன் தோழர். வீ.ஏ.கந்தசாமி அவர்கள் இன்று எம்முடன் இல்லை. அவர் மறைந்து ஓராண்டு ஆகிவிட்டாலும், எமது சமூக விடிவுக்குவேண்டி அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பு வரலாற்றில் என்றும் உயர்ந்து நிற்கும்.

எழுபது வயதில் ஓர் இளைஞனைக் கண்டோம். பள்ளிச் சிறுவர் துள்ளித் திரிந்ததுபோல தனது இறுதிமூச்சுவரை மக்களின் விடிவுக்காக சுறுசுறுப்புடன் தொடர்ந்து இயங்கிய ஒரு நிறுவனம் தோழர். வீ.ஏ.கந்தசாமி.

1940களின் நடுப்பகுதியில் பொருள் முதல்வாதக் கருத்துக்களில் கவரப்பட்டு அரசியலுக்குள் நுழைந்து பொது வாழ்வில் தன்னை அர்ப்பணித்த தியாகச் செம்மல்.

பொதுவுடமைக் கருத்துக்கள் கொண்ட தொழிற்சங்க அமைப்புக்களில் நலிவுற்ற தொழிலாளர்கள் இணைந்து கொண்ட காலமது. இளமைக் காலத்தில் சுருட்டுத் தொழிலாளியாக தனது வாழ்வை ஆரம்பித்த தோழர். வீ.ஏ.கந்தசாமி அவர்கள்.

தொழிலாளர்கள் சார்பாக, சீவல் தொழிற்சங்கம், சுருட்டு தொழிற்சங்கம், சாய்ப்பு சிப்பந்திகள் தொழிற்சங்கம், நகரசுத்தி தொழிலாளர் சங்கம் என்பன ஆரம்பிக்கப் பட்டு திறம்பட செயற்படவும், சமூக அடிப்படையில் சிறு



பான்மைத் தமிழர் மகாசபையும் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட முன்னின்று உழைத்த செயல் வீரர்.

பொது வாழ்விலும், அரசியலிலும் ஈடுபாடு கொண்டிருந்த தோழர். கந்தசாமி அவர்கள் கலை இலக்கியத்திலும், பத்திரிகைத் துறையிலும் அரும்பணியாற்றியவர்.

அன்றைய நாட்களில் இருந்த முற்போக்கு எழுத்தாளர்களுடன் இணைந்து தேசாபிமானி, தொழிலாளி, யுவசக்தி, வசந்தம், விடுதலை போன்ற பத்திரிகைகள் தொடர்ச்சியாக வெளிவர பெரும் பங்கு வகுத்தவர். அத்துடன் சிறந்த பேச்சாற்றலும், நாவன்மையும் கொண்டவர்.

இலங்கையில் தேசிய இன முரண்பாடுகள் கூர்மையடைந்த 1980 களின் பிற்பகுதியில் எழுச்சிபெற்ற புரட்சிகர சக்திகளை அவர் கூர்ந்து கவனித்தார். இளைய தலைமுறைச் சக்திகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற் பாடுகளையும் தோழர். பத்மநாபா அவர்களின் ஆற்றலையும் கண்டு தன்னை எம்முடன் இணைத்துக்கொண்டார்.

தேசிய இன ஒடுக்கு முறைகளின் விளைவாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின், தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் மற்றும் மக்கள் பிரிவினரை அணிதிரட்டுவதில் முழுமூச்சாக ஈடுபட்டார். இந்திய இலங்கை ஒப்பந்தம் அமுல்படுத்துவதை வலியுறுத்துவதில் மிக உறுதியுடன் செயற்பட்டார்.

முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முக்கிய அரசியல் இயக்கங்களுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதிலும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு, ஜனநாயக, மனிதஉரிமை சக்திகளை வென்றெடுப்பதில் அதிக அக்கறையுடன் ஆர்வம் காட்டினார்.

தனது இறுதிக் காலத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் நடைபெற அயராது உழைத்ததோடு "புதியபார்வை" பத்திரிகை செழுமையடையவும் தொடர்ச்சியாக வெளிவரவும் பக்க பலமாக இருந்து அரும்பணி யாற்றியவர்.

தனது வாழ்நாள் முழுவதும் சித்தாந்த தெளிவுடன் உழைக்கும் மக்களின் விடிவுக்காகவும், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடி வாழ்ந்த அந்த உண்மை "மனிதன்" தோழர். கந்தசாமி அவர்கள் எம்முடன் இணைந்திருந்ததையிட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பெருமை அடைகிறது. இப்படியான மாமனிதன் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் தமிழ் பேசும் மக்களின் இன்றைய இளைய சமுதாயத்துக்கும் பெருமையாகும்.

## நிச்சயமில்லாத எதிர்காலத்தை.......

(நாலாம் பக்கத் தொடர்ச்சி)

எளிமையான கேள்விக்கு இவர்களிடம் பதில் கிடையாது.

**இவர்கள் தமது இயலாமையிலிருந்து, நம்பிக்கையின்மையிலிருந்து ஆதிக்கம் வகிக்கும் ஒரு தவறான சக்தியைப் பற்றி வியப்புற்று நிற்கிறார்களா ??**

கடந்த ஐம்பது வருடங்களில் எமது பாரம்பரிய பேரினவாத ஆட்சியாளர்கள் செய்த கொடுமைகளையும், கடந்த பத்துப் பதினைந்து வருடங்களில் புலிகள் செய்ததையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய பரிதாப நிலையில் ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்வார்களா ?

ஈழத் தமிழர்களுக்கு என்ன மிஞ்சி இருக்கிறது ? பட்டு வேட்டி பற்றிய கனவிலிருந்தால் கட்டிய கோவணமும் களவாடப்படும் என்று ஒரு சிறந்த தமிழ்த் திரைப் படத்தில் கேட்ட ஞாபகம். ஆனால் இந்த வாக்கியம் ஈழத் தமிழர்களுக்கு பிழையான கூற்றல்ல.

**நிச்சயமில்லாத எதிர்காலத்தை நோக்கி நகர்த்தி விடப்பட்ட ஒரு சமூகம், பேரினவாத ஆட்சியாளர்களாலும், உள்ளூர் கொடுங் கோலர்களாலும் ஏமாற்றப் பட்டுக் கொண்டிருக்கையில், அச்சமூகத்தல் பிறந்த பொறுப்பு வாய்ந்த மனிதர்கள் என்ன செய்யவேண்டும்??**

புலிகளின் நடவடிக்கைகளால் ஈழத் தமிழர்கள் மீது ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயத்தை நீக்கியாக வேண்டும். ஈழத்தமிழர்கள் உலகின் எந்தப் பகுதியில் துன்புறுத்தப் பட்டாலும், இன்னல்களை அனுபவித்தாலும் குறைந்தபட்ச குரலெழுப்பியாக வேண்டும்.

ஈழத்தமிழர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை, துன்பங்களை 1986க்கு முன்னர் சர்வதேச அரங்கில் எடுத்துச் சென்றதுபோல் இப் போதும் முன்னெடுக்க வேண்டும்.

ஈழத்தமிழர்கள் பூமிப் பந்தில் வாழும் ஏனைய சுதந்திரமான உலக மக்களைப் போல சுயமரியாதை, கௌரவம் உடையவர்கள் என்பதை நிலை நாட்டியாக வேண்டும்.

அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டையின் நிலவரத்திலிருக்கும் தமிழர்களுக்கிடையே குறைந்த பட்ச புரிந்துணர்வை உண்டாக்குவதற்கு ஈழத்தமிழ் விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், பத்திரிகையாளர்கள், மனிதஉரிமைவாதிகள், புத்திஜீவிகள் தம்மாலான முயற்சியை மேற்கொண்டாக வேண்டும்.

சிங்களப் பேரினவாதிகள், அவர்கள் ஆள்பவர்களாக இருந்தாலென்ன, எதிர்கட்சிகளாக இருந்தாலென்ன ஒரே குரலில் பேசுகிறார்கள். வடக்கு கிழக்கு இணையக் கூடாது என்பதில் இவர்களிடையே இரண்டு பட்ட கருத்துக் கிடையாது. ஆனால் தமிழர் தரப்பில் ஒருமுகமில்லை. ஒருமித்த குரலில்லை. இந்நிலமை இலங்கையின் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டதை எவரும் மறுத்து விட முடியாது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இப்போது 40% தான். 1990 இல் புலிகள் அரசுயுத்தம் ஆரம்பித்து, இன்றுவரை கணிசமான அளவில் மேலதிக சிங்களக் குடியேற்றங்கள் நடந்து விட்டன.

திருகோணமலை, தமிழர்களுக்கு ஒரு கனவாகிக் கொண்டிருக்கிறது. வெலிஓயா விரிவடைந்து வருகிறது. அம்பாறை தமிழர்களின் பிரதேசம் இல்லை என்றாகி விட்டது.

கிழக்கில் தமிழர்கள் பாலஸ்தீனர்களைப் போல ஒரு ஜெரிக்கோவையும், காசாவையும் தேடவேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

கல்வி ஒரு காலத்தில் எமது மூலதனங்களில் ஒன்று. இன்று அந்த நிலை இல்லை.

சொந்த மண்ணில் அகதிகள் என்பதே இன்று மக்களின் வாழ்க்கை முறையாகி விட்டது. உழைப்பு, கல்வி, கலாச்சார நடவடிக்கைகள் யாவுமே ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக பொருளாதாரத் தடை என்ற பரந்த பெயருடன் உணவுத் தடை.

தமிழர் அரசியலின் பலவீனத்தை நன்கு அறிந்து கொண்ட பேரினவாத சக்திகள் எவ்விதமான உருப்படியான தீர்வையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

ஏறத்தாள இரண்டு வருடங்கள் செயற்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை பிரித்திடுவதிலேயே பேரினவாதக் கட்சிகள் அனைத்தும் குறியாக நின்றன. பிர்சனைகளை தீர்த்து வைக்கிறேன் என்றுகூறி உலகையும், தமிழர்களையும் ஏமாற்றும் வேலையாக அது முடிந்து விட்டது. தற்போது தமிழர் தரப்பு ஏற்றுக் கொள்ளாத அந்தத் தெரிவுக்குழுவின் பைலகள் சம்பிரதாய அறிக்கையுடன் மூடப்பட்டு விட்டது.

ஆனால் பிரேமதாசாவின் மரணத்துக்குப் பின் ஆளும் வட்டாரங்களில் பிரச்சனையை இழுத்தடிப்பது தமக்கு தனிப்பட்ட முறையில் ஆபத்தை தோற்றுவித்துவிடலாம் என்ற பயம் எழுந்துள்ளது. ஆனால் தீர்க்கப்பட வேண்டியவிடயம் என்ன என்பதில் தெளிவில்லை. அல்லது தெளிவில்லாதது போல் பேசுகிறார்கள்.

இடதுசாரிகள், மிதவாத சிங்கள அரசியல் தலைவர்களை கூடுதல் அக்கறை எடுத்துச் செயல்பட வேண்டும்.

என்னென்ன வாய்ப்புகள் உண்டோ அவை அத்தனையையும், சிறிதோ பெரிதோ பயன்படுத்தியாக வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர் இயக்கங்கள் திட்டவட்டமாக தம்மை இனம்காட்டியாக வேண்டும்.

**தோழர்.தரன்**

படிப்பகம்

www.padippakam.com



# யுத்தம் தொடரும்வரை நிவாரணமும் தொடரும்

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தோழர்.சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள், 7.10.93இல் பாராளு மன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.........**



இந்த நாட்டிலே ஒரு பக்கத்தில் யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பொழுது, இன்னொரு பக்கத்தில் நிவாரண வேலைகளுக்காகவும் இங்கே ஓர் அமைச்சு உள்ளது. உண்மையில் தொடர்ச்சியான யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. அதே சமயம் அழிந்த கட்டிடங்களுக்கும், இறந்த மக்களுக்கான நிவாரணம் அளிப்பதற்காகவும் இந்த மீளமைப்பு, புனர்வாழ்வளிப்பு அமைச்சும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே வருகின்றது.

இந்த நாட்டிலே இந்த யுத்தம் நிறுத்தப்படும் வரை, கோடானு கோடி ரூபா பணம் இப்படியான வேலைகளுக்காகச் செலவிட வேண்டிய நிலை இருந்து கொண் டேயிருக்கும் தொடர்ச்சியாக இந்த நாடு போய்க் கொண்டிருக்கும் அழிவுப் பாதையானது, இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடங்கி சகலதையுமே மூழ்கடித்து, மக்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கும் அழிந்து போன கட்டடங்களைத் திருத்துவதற்கும் பணத்தைச் செலவழிக்க வேண்டிய ஒரு நிலைக்கே இட்டுச் செல்லும்.

ஒரு பக்கத்தில் குண்டுமாரி பொழிவதற்குக் குண்டுகளை வாங் குவதற்காக காசு போய்க் கொண்டிருக்கின்றது. மறு பக்கத் தில் அவற்றைச் சரிசெய்வதற்கான காசு என இது போய்க் கொண்டே இருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த "யாழ்தேவி" யுத்த நடவ டிக்கையின் போது ஒரு விடயத்தை இந்த நாடும், உலகமும் மிகவும் கண்கூடாகவும் கண்டுகொண்டுள்ளன. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒரு கட்டத்துக்கு மேல் நிற்கமுடி யாது. சண்டையிட முடியாது என்ற நிலையும், அதே போல் அரசாங்க துருப்புகளாலும் முற்று முழுதாக முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்க முடியாது என்ற நிலையும் தெட்டத்தெளிவாக விளங்கியுள்ளன. 125க்கு மேற்பட்ட இராணுவத்தின் உயிர்களைப் பலிகொடுத்து கிளாலி வரை 12 கிலோமீற்றர் தூரம் போய் அங்கே நிற்க முடியாமல் மீண்டும் திரும்பி வந்துள்ளார்கள். அதே போல் கிளாலியில் நிற்க முடியாமல் ஓடிய புலிகளும் மீண்டும் கிளாலிக்கு வந்துள்ளார்கள்.

இந்த நாட்டின் துருப்புக்களின் நிலையையும், அவர்களின் Limitation ஐ கவனத்தில் எடுத் துக் கொண்டு இந்த அழிவு யுத்தம் தொடர்வதை நிறுத்தி நாம் ஓர் தீர்வுக்கு வரவில்லை யானால், நிச்சயமாக நாம் இன்னும் பத்து வருடங்களுக்கு இப்படியான நிவாரணப் பணிக ளுக்குக் காசு ஒதுக்குவது தொடர்பாகப் பேசிக்கொண்டே இருக்க வேண்டிவரும்.

இந்த நாட்டில் இருக்கக் கூடிய உயர் இராணுவ அதிகாரிகள், நிச் சயமாகவே நான் நம்புகின்றேன் இந்த யுத்தத்தினால் மாத்திரம் ஒரு தீர்வுக்கு வராது என்பதில் நம்பிக்கையாக உள்ளார்கள். ஆனால், இந்த நாட்டின் அரசியல் வாதிகள் இந்தப் பிரச்சனைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதை விடுத்து, ஒரு யுத்தத் தின் மூலம் ஒரு தீர்வைக் காண முனைவது மிகவும் வேடிக்கை யானது மாத்திரமல்ல, அநியாய மாக அப்பாவி இராணுவ வீரர் களைப் பலிகொடுப்பதுமாகத் தான் இருக்கின்றது. தமது சொந்த நலன்களின் அடிப்படை யில், நான் சொந்த நலன்கள் என்று குறிப்பிடுவது குறுகிய கட்சி நலன்கள், வாக்கைப் பெறு வதற்கான குறுகிய நலன்கள் என்ற அடிப்படையில் இருந்து கொண்டு இராணுவத்தினரைப் பலி கொடுத்துக் கொண்டிருப்பது மிகவும் மோசமான ஒரு நடவடிக்கை என்றே நான் கருதுகின்றேன்.

நான் பல இடங்களில் ஒரு விட யத்தைச் சுட்டிக்காட்டி வந்துள் ளேன். அந்த விடயங்கள் சில சமயங்களில் அரசியல்வாதிகளுக்கு; ஆளும்கட்சி யாளருக்கோ, எதிர் கட்சியைச் சேர்ந்த லங்கா சுதந்திரக் கட்சியினருக்கோ, கசப் பாக இருந்திருக்கலாம். ஆனால் நாம் எமது நோயைக் குணப்படுத்த வேண்டுமாயின் சில சமயங்களில் கசப்பான மருந்தை யும் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்பதை நாம் மறுக்க முடியாது.

ஏனெனில் இந்த நாட்டில் எமது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எமக்குப் பக்குவமும் வல்லமையும் இருக்குமாகவிருந்தால், நாம் இது வரையில் எமது பிரச்சனையைத் தீர்த்திருப்போம்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் ஆயுதம் ஏந்திய ஒரு யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தப் பத்து வருடங் களில் எம்மால் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கமுடியவில்லை.

பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள், ஏ.பீ.சி. தெரிகுழு இன்னும் ஏதேதோ எல்லாம் நடத்திக் கொண்டிருந்தோம். இன்றும் "சர்வ ரீதியாகத் தெரிவுக்குழு ஒன்று இருக்கின்றது. அதன் முடிவுகளை எதிர்பார்த்த வண்ணம் இருக்கி றோம்" என்று திரும்பவும் திரும் பவும் கூறிவருகின்றோம்.

ஆனால் பேச்சுவார்த்தை களின் மூலம் தீர்வு காணப்பட்டதா என்றால் இல்லை. நாம் ஒரு பிழை விடுகின்றோம். அதாவது சிங்கள மக்களையோ தமிழ் மக்க ளையோ அல்லது முஸ்லீம் மக்க ளையோ நாம் நூறு வீதம் திருப்திப்படுத்திவிட முடியாது.. ஆகவே சில இடங்களில் விட்டுக் கொடுப்பதென்பது இரு பக்கத் திலும் இருந்தால் தான் இப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும்.

> "இந்த நாட்டிலே இந்த யுத்தம் நிறுத்தப்படும் வரை, கோடானகோடி ரூபா பணம், அழிந்த கட்டிடங்களுக்கும், இறந்த மக்களுக்குமான நிவாரணம் அளிப்பதற்காக செலவிட வேண்டிய நிலை இருந்து கொண்டேயிருக்கும். தொடர்ச்சி யாக இந்த நாடு போய்க் கொண்டிருக்கும் அழிவுப் பாதையானது, இந்த நாட்டின் பொரு ளாதார வளர்ச்சி தொடங்கி சகலதையுமே மூழ் கடித்து, புனர்வாழ்வு, புனர் அமைப்பு நிவாரண வேலைகளுக்கு பணத்தைச் செலவ ழிக்க வேண்டிய நிலைக்கே இட்டுச் செல்லும்."

இங்கே எம்மால் அப்படியாவது விட்டுக் கொடுப்புகளைச் செய்து இப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கான முடியாது விட்டால் நிச்சய மாக இந்த நாட்டில் வேறு யாராவது தலையிடுவதைத் தவிர்க்க முடியாது.

ஏற்கனவே இந்த நாட்டில் இந்தியா தலையிட்டதன் மூலம் தான் குறைந்தபட்சம் தமிழ்மொழி அரச மொழியாக்கப் பட்டது. இல்லையெனில் அதுகூடக் கிடைத் திருக்கும் என்பது சந்தேகமே. இதேபோல், தொடர்ந்தும் வேறு யாராவது தலையிடுவதற்கான ஒரு சூழ்நிலையை நாமே ஏற்படுத்தி வருகின்றோம் என்பதை, நாம் மறந்து விடக்கூடாது.

இந்த நாட்டுக்கு பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலிருந்து AID Consortium, IMF, World Bank என்பவை மூலம் நாம் கடன் எடுக்கிறோம். கடனை எடுத்து எமது பொருளாதாரத்துக்காகப் பயன் படுத்துகின்றோம்.

நிச்சயமாக இந்த யுத்தம் தொடர்ச்சியாக போகுமிடத்து; அவர்களினால் எமக்கு உதவி செய்ய முடியாது. அவர்களாகவே நெருக்குதல்களைக் கொண்டு வர வேண்டிவரும். எம்மால் இப்பிரச் சனையைத் தீர்க்க முடியாத விடத்து, நாம் யாரிடமும் உதவி கேட்பதற்கு வெட்கப்பட வேண் டிய அவசியமில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

ஒரு விடயத்தை கௌரவ தலை வர் அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். நாம் மேலும் மேலும் எம்மை மடையராக்கிக் கொள்வ தில் அர்த்தமில்லை. எம்மால் இப் பிரச்சனையைத் தீர்க்க முடியுமா? தீர்க்க முடியுமாக இருந்தால் இது வரை எம்மால் தீர்க்கப்பட்டதா? இரண்டு நாட்களுக்கு முதல் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பி னர்களுடன் பேசியபோது கூட பல ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களும் அங்கத்தவர்களும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத் தவர்களும், "எமக்கு யு.என். வேண்டாம், யாரும் வெளியி லிருந்து வேண்டாம், நாமே எமது பிரச்சனையைத் தீர்த்துக் கொள் வோம்" என்று சொன்னார்கள்.

"பொஸ்னியாவிலும், சோமாலியா விலும் என்ன நடைபெறுகிறது? எமக்கு எல்லாம் தெரியும். எம்மை விட்டு விடுங்கள்" என்று கூறினார்கள். அது நியாயமானதே.

ஆனால் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எம் மால் செய்யமுடியுமாக இருந்தால் இவ்வளவு காலதாமதம் ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



# தேசிய சமூகங்களுக்கு சம அந்தஸ்து



## இதுவே இனப்பிரச்சனைக்கு தீர்வாகும்

### தோழர்.வரதராஜப் பெருமாள் "ஐலண்ட்" பத்திரிகைக்குப் பேட்டி

***நீங்கள் இந்தியாவிலிருந்து இலங்கை அரசியலை எவ்வாறு நோக்குகிறீர்கள்?***

அரசியல் கொலைகளும், மர்மமான அரசியல் தலைவர்களின் அரசியல் படுகொலைகளும் இலங்கையின் அரசியலை அலங்கரிக்கின்றன. கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கும் இந்த வன்முறைச் செயல்கள் தான் எனக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுக்கின்றன.

முன்போலவே இழப்புக்கள், இறப்புக்கள், அழிவுகள் வடக்கு கிழக்கில் தொடர்கின்றன. வடகிழக்கின் மாகாண சபையின் சீர்குலைவைத் தொடர்ந்து 13வது திருத்தச்சட்டம் இல்லாத பொருளாக காட்டப்பட்டு வடகிழக்கின் ஆட்சி கொழும்பிலிருந்து நிர்வகிக்கப்படும் கீழ் நிலைக்குத் தாழ்ந்துள்ளது. புலிகளின் எதிலும் நம்பிக்கையில்லாத் தன்மையும் சிங்களக் கட்சிகளின் குறுகியபார்வையும் தான் மேற்கூறிய வளர்ச்சிக்கு நான் இவைகளையே காரணமாகக் காட்டுகிறேன்.

***உங்களுடைய அறிவிற்கு எட்டியவகையில் இப்படி நீண்டு கொண்டிருக்கும் பிரச்சனைக்குத் தீர்வாக எப்படியான வழிவகைகளை நோக்குகிறீர்கள்?***

ஒரு பக்கத்தில் சிங்கள அரசியல் தலைமைகள் தமிழ்மக்களுக்கு அதிகம் உரிமைகளைக் கொடுப்பது ஈழம் பெறுவதற்கு அடிக்கல்லாக அமைந்துவிடும் என்ற எண்ணத்திலிருந்து விடுபடவேண்டும்.

இந்த சிங்கள பேரினவாதக் கொள்கையைப் பின்பற்றுவதில் அவர்களுக்கு கிடைத்தவெற்றி இலங்கையின் தேசிய ஒருமைப்பாடடைக் கட்டிஎழுப்புவதில் தமிழ்பேசும் மக்களை நீங்களாக்கியதேயாகும் என்பதை அவர்கள் உணரவேண்டும். இந்த நீக்கமே தமிழ்மக்களை பிரிவினைபற்றிச் சிந்திக்கத் தூண்டியது.

இதைத் திருத்த வேண்டுமென்றால் இலங்கை மக்களின் தலையெழுத்தை நிர்ணயிப்பதற்கு அங்குள்ள தேசிய சமூகங்களுக்கு சமபங்காளர் என்ற சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும் என்பது முக்கியம். இது அடிப்படை அரசியல் யாப்பு மாற்றத்தினூடாக மட்டுமே செயல்படலாம். முக்கியமாக மீளப்படாத உத்தரவாதங்களையும், தொழிற்பாடுகளையும் உட்படுத்தப்படுகிறதாக இருக்கவேண்டும். அவை இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கான அதிகாரப்பரவலாக்கலையும் மத்திய அரசுக்கான தகுந்த அதிகாரப்பகிர்வையும் அளிக்கிறது.

மறுபக்கத்தில் தமிழ்பேசும் மக்களின் சட்டபூர்வ மான அபிலாசைகளில் சிங்கள மக்களுக்கு இருக்கும் பயத்தையும் ஐயப்பாடுகளையும் குறைக்க அவர்களை நேரடியாக அணுக தமிழ் சமுதாயம் தயாராகவேண்டும். தமிழ்பேசும் மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளின் நிறைவு, சிங்கள மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை எந்தவகையிலும் ஆக்கிரமிக்காது என்பது தெளிவாகவேண்டும்.

பாசிச எல்.ரி.ரி.ஈ. யினர் தாங்கள்தான் தமிழ்மக்களின் ஏகப்பிரநிநிதி என்று சொல்லிக்கொள்வதுடன் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை முறையே கீழ்மைப்படுத்திக்கொண்ட பாசிச பாரம்பரிய மும் எதிலும் நம்பிக்கையற்ற குணமுடைய அவர்களுக்கு கொடுக்கும் எந்த அறிவுரையும் உதந்ததல்ல. மேலே சொன்னவைகளை எல்.ரி.ரி.ஈ. யினரால் தன்னிச்சையாகப் பிரகடனம் செய்யப்பட்ட நடுவர்களும் அறியவேண்டும்.

***உங்களுடைய அமைப்பு (E.P.R.L.F.) என்று அழைக்கப்படுகிறது. அந்த அமைப்பின் பெயரிலேயே ஈழம் தொங்கிநிற்கிறது. இதன் பயனாக சிங்கள மக்கள் உங்களையும் L.T.T.E. யினரையும் ஒன்றாகவே பார்க்கிறார்கள். நீங்கள் எப்படி E.P.R.L.F. ஐ L.T.T.E. யிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறீர்கள்.***

இந்தக் கேள்வியையிட்டு நான் ஆச்சரியப் படுகிறேன் உங்களுடைய இந்தக்கேள்வி குறிக்குமாப்போல் ஒரு பெரிய பிரச்சனையா சிங்கள மக்கள் மத்தியில் இருக்கிறது என்று நான் எண்ணவில்லை. ஈழம் என்றால் என்ன என்பதை இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விளக்கிக்கூற விரும்புகிறேன்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் சிறுபான்மை யினராக இருந்தாலும் இவர்கள் ஒரு தனித் தேசிய இனம். வடக்கு கிழக்கை தமிழ் பாரம்பரிய பிரதேசமாக கொண்டுள்ளார்கள். ஈழம் என்பது தமிழ் பேசும்மக்களை அடையாளப் படுத்தும் சின்னமாகும். ஈழம் என்பது பிறப்புரிமையாலோ, கூட்டு அடையாளத்தாலோ தானாகத் தோன்றியது என்று நாங்கள் நம்பவில்லை. அது சிங்களப் பேரினவாதம் தமிழ்பேசும் மக்களின் தனித்துவத்தையும் பிறப்புரிமையையும் மறுக்கும் அளவுக்கு வந்த பொழுதுதான் அது வலுப்பெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இனரோ எல்.ரி.ரி.ஈ. யினரோ அதை எப்படிக் கருதுகிறார்கள் என்பதை விட மேலே சொல்லப்பட்ட வைகளே உண்மைக் காரணிகள். ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்கும் எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையேயான தீர்மானமான வித்தியாசம் எப்படியிருந்தாலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைய ஒழுகி நிகழ்வுகளை உரு அமைப் பதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். இனர் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். இதனால் தமிழ் தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படலாம். அதனால் மதச்சார்பற்ற சனநாயக ஐக்கிய இலங்கைக்குள் ஈழத்தமிழரின் அடையாளம் பாதுகாக்கப்படலாம்.

---

# கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு விவேகமற்றது

பின்வரும் காரணங்களுக்காக இணைப்பையிட்டுக் கிழக்கில் வைக்கும் சர்வசன வாக்கெடுப்பு ஜனநாயகமற்றது, பிரதிநிதித்துவப்படுத்தப்படாதது, விவேகமற்றது.

பி.எஸ்.சி. தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுக்கு வழி வகை காண்பதற்காக அமைக்கப்பட்டது. கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது வடக்குக் கிழக்குவாழ் தமிழபேசும் மக்களின் ஒட்டுமொத்தமான அபிப்பிராயத்தை உதாசீனப் படுத்துவதாகும். ஆகவே கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது (எல்லாத் தமிழ் பேசும் மக்களையும்) பிரதிநிதித்துவப் படுத்தப்படாதது.

வட- கிழக்கு மாகாணசபை ஒன்றரை ஆண்டுகளே இருந்தது. கடந்த மூன்று வருடங்களாக சவனர் ஆட்சி நடந்தது. அரசியல் பரவலாக்கல் சம்பந்தமான அரசியல் யாப்பின் 13வது நடைமுறைப் படுத்தப்படாமல் அப்படியே செயலற்றுப் போய்விட்டது. கிழக்குமாகாண மக்களுக்கு எந்தநேரத்திலும் அவர்களுக்கு அவர்கள் அபிலாசைகளைப் பிரதிபலிக்குமா, இல்லையா என்பதை அறிவதற்கு முறையே தெரிவுசெய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபையில் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஆகவே பிரேரிக்கப்பட்டுள்ள பொதுசனவாக்கெடுப்பு விவேகமற்றது.

அரசபடைகளுக்கும் எல்.ரி.ரி.ஈ.க் கும் இடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தங்களின் பயனாக ஆயிரக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் இடம்பெயர்ந்தும் இடங்களை விட்டகன்றும் உள்ளார்கள். அவர்கள் வாழும் இடங்களுக்கு திரும்பி வந்து முற்றுமுழுதாக குடியமர்த்தப் படுவதற்கும், புனர்வாழ்வுகளுக்கும் முன்பு எந்தவிதமான தேர்தல்களும் சனநாயகமற்றவையல்லாமலும் முன் கூட்டியே திட்டமிடப்பட்டவையுமாகும்.

T.U.L.F, E.P.R.L.F, E.R.O.S, P.L.O.T.E, T.E.L.O, E.N.D.L.F, போன்ற தமிழ் அரசியல் இராணுவ அமைப்புகளின் பார்வைக்கு இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையின் நகல் காண்பிக்கப்பட்டபோது இணைப்புக் கான சர்வசன வாக்கெடுப்பின் சரத்திற்கு எதிர்ப்புக் காட்டப்பட்ட தோடு ஏனைய குறைபாடுகளிலும் கவனம் செலுத்தப்பட்டது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். சுட்டிக்காட்டியது.

பொதுசன வாக்கெடுப்பு இல்லாமலே நிரந்தரமாக வடக்கு கிழக்கு இணைக்கப்படலாம் என்று கொடுக்கப்பட்ட உறுதிமொழிக்குப் பின்னரே தமிழ் அமைப்புக்கள் தங்கள் ஆதரவைக் கொடுப்பதாகவும் ஆயுதங்களை ஒப்படைப்பதாகவும் தீர்மானித்தன.

படிப்பகம்

www.padippakam.com



# கட்சியில் இல்லாதவர்கள் கட்சியிலிருந்து விலகுவதாக அறிக்கை விடுவது பற்றி...........

தோழர்களே! ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயற்படத் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை பலநூற்றுக் கணக்கான தோழர்கள் கட்சியில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல் பலர் விலகிச் சென்றுமிருக்கிறார்கள். கட்சியிலிருந்து விலகுவதற்கான காரணங்களைச் சொல்லி வெளியேறுபவர்கள் பற்றியும், குற்றநடவடிக்கையாக விலக்கப்படுபவர்கள் பற்றியும் கட்சி தன் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தும்.

ஆனால் ஒருபோதும் கட்சி உறுப்பினராயல்லாத நபர்கள் கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும், கட்சியை உடைத்து விட்டதாகவும் தான் தோன்றித்தனமான அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பதையிட்டு தோழர்கள் குழப்பமடையத் தேவையில்லை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது மாகாண அரசாங்கத்தில் பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலையளித்தது. வேறு தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தோரையும், ஆதரவாளர்களையும், தமிழ் மக்கள் நலன்கருதி மாகாண அரசைப் பலப்படுத்துவதற்கு இணைந்து செயற்பட முன்வந்தவர்களையும், அமைச்சர்களாகவும், சபாநாயகராகவும், சபை உறுப்பினர்களாகவும், செயலாளர்களாகவும், மற்றும் அரசாங்கத்துக்கு தேவையான பணிகளிலும் எமது உறுப்பினர்களுடன் சேர்த்துக் கடமையாற்ற வைத்தது.

எமது கட்சி உறுப்பினராக இல்லாது, மாகாண அரசின் செயற்பாடுகளில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் யாரும் எமது கட்சியின் பெயரில் அறிக்கைகள் விடுவது அல்லது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து விலகிக் கொள்வதாயோ அல்லது உடைத்து விட்டதாயோ செய்திகள் பரப்புவது விஷமத்தனமானதும், கேலிக்கூத்தானதுமாகும்.

சிறிய மீன்னளுக்கு பேசக் கற்றுக் கொடுத்தால் அவை தங்களை திமிங்கிலங்கள் என்று நினைத்துக் கொண்டு பேசத் தொடங்கும் என்றொரு பழமொழி உண்டு.

எமது கட்சியினால் நடத்தப்பட்ட மாகாண அரசில் இணைந்து கடமையாற்றியவர்கள், அரசாங்கம் இல்லாது போனதும் எம்மைவிட்டு விலகியிருப்பது இயல்பானதே. இன்றைய புறச்சூழ்நிலையும் அவ்விதமிருக்கவே அவர்களை நிர்ப்பந்திக்கும்.

ஆனால் யானையின் முதுகில் ஏறிச் சவாரி செய்த எலி, பாலத்தை ஆட்டோ ஆட்டென்று ஆட்டியதாக சொல்வது போல, அவர்கள் கட்சியை உடைத்து விட்டதாயோ அல்லது வேறுவகைகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பெயரைக் கொச்சைப் படுத்தியோ திரிவது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல.

யாரேனும் ஒருசிலர் சேர்ந்து புதுக்கட்சி ஒன்றை ஆரம்பிப்பதோ, அதற்கு விரும்பிய பெயரைச் சூட்டிக் கொள்வதோ அவர்களுடைய சொந்த விஷயம். ஆனால் பொய்யாக நடந்து கொள்வது யாருடைய சொந்த விஷயமும் அல்ல.

சமீபத்திய நிகழ்வாக, எமது மாகாண அரசில் அமைச்சராக இருந்த அபுயூசுப் அவர்கள் புதுக்கட்சி ஒன்றைத் துவக்கியுள்ளார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (நாபாசாரி) என்பது அதன் பெயர் என அறிவித்துள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அவரது கட்சிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அபுயூசுப் அவர்கள் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்து பின்னர் அக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர். வடக்குக் கிழக்கு மாகாண அரசு கலைக்கப்பட்ட பிறகு, எமது கட்சியால் சிலவேலைகள் அவருக்குத் தரப்பட்டிருந்தன. அவரோ வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்களைத் துஷ்பிரயோகம் செய்துவிட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டார்.

மற்றப்படி அவர் எக்காலத்திலும் எமது கட்சியில் உறுப்பினராயிருந்ததில்லை. எமது கட்சிப் பெயரை உபயோகித்து அவர் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளாரே தவிர, வேறு எந்தவிதத்திலும் இப்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அபுயூசுப்புக்கும் சம்பந்தமெதுவுமில்லை.

தமிழ்கட்சிகள் மீது அவதூறு பரப்பும் விஷமத் தனமான முயற்சிகளை இப்போது நாம் பல்வேறு வகைகளிலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆங்காங்கே சிலநபர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு அரசியல் விளையாட்டை நடத்துபவர்கள் குறித்து நாம் எச்சரிக்கையடைய வேண்டியுள்ளது.

தமிழர் அமைப்புகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்திவிட எண்ணும் இத்தகைய முயற்சிகள் எவ்வளவு சிறுபிள்ளைத் தனமானவை என்றும் புரிய வைக்க வேண்டியிருக்கிறது.

**புதியகண்ணோட்டம் ஐப்பசி 1993**

---

## தமிழ் மக்களைத் தலையற்றவர்களென....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றவர்களை புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென "அட்வைஸ்" பண்ணும் தொண்டமான், புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனை விடுவிக்க வேண்டுமென்று நினைக்கவுமில்லை, புலிகளும் இதுபற்றி எந்தக் கேள்வியும் எழுப்பியதாகத் தெரியவில்லை.

முன்னாள மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சூசைதாசனிடம், தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கலைத்து விடும்படியும், கம்பனிகள் போல் வியாபாரம் இல்லாவிட்டால் கட்சிகளையும் கலைத்துவிடுவதுதான் நல்லது என்று கூறியதாகவும் குறிப்பிட்டார்.

அரசுடன் இணைந்து செயற்படும் ஏனைய தமிழ்கட்சிகள் காட்டிக் கொடுப்பவர்கள் என்று கூறினார். இனவெறி அரசுடன் இணைந்து செயற்படும் தந்திரோபாயமோ, அல்லது செயற்பட்ட ராஜதந்திர நகர்வோ தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்கு ஒருபோதும் அனுகூலமாயிருக்காது என்பதுடன் இனஒழிப்பை உக்கிரப்படுத்தவே பயன்படுத்தப்படும் என்பது ஒருபுறமிருக்க, இனவெறிஅரசின் அமைச்சராக இருந்து பிழைப்பு நடத்திவரும் தொண்டமான் இதுபற்றி அங்கலாய்த்துக் கொள்வது போல் பாவனை செய்வது, தமிழ் மக்களின் பொது அறிவைக் கிண்டல் செய்யும் வக்கிரமான போக்கே ஒழிய வேறொன்றுமில்லை.

**"சங்கதி" ஐப்பசி 1993 வெளியீட்டிலிருந்து..........**


# ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்

# EELAM PEOPLES INFORMATION CENTRE

POST BAG - 1041
MADRAS - 17
INDIA

B.M.BOX - 1738
LONDON - WCIN - 3XX
U.K

11,R.SALINGRO
95140, GARGES
FRANCE

P.FACH - 100206
44002 DORTMUND
GERMANY

P.BOX - 6800
AGINCOURT
ONT - M1S3C6
CANADA

P.BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY

P.FACH 506
BERN - 17
SWITZERLAND


ஈழமக்கள் புரடசிகர விடுதலை முன்னணியின் சர்வதேச கிளைகளின் ஒன்றியத்தினால் புதியபார்வை வெளியிடப்படுகிறது.

படிப்பகம்